பத்திரிக்கைச் செய்தி வெளியீடு - 39

தமிழகத்தில் லஞ்ச ஒழிப்புத்துறையால் 26.06.2026 முதல் 03.07.2026 வரை மேற்கொள்ளப்பட்ட 6 பொறிவைப்பு நடவடிக்கைகள்

1. 30.06.2026 அன்று பள்ளி ஆசிரியருக்கு ஆண்டு ஊதிய உயர்வு வழங்க திரு.புகழேந்தி, தலைமை ஆசிரியர், தண்டலைபுதூர், முசிறி, திருச்சி மாவட்டம் (பொறுப்பு மாவட்ட கல்வி அதிகாரி, திருச்சி மாவட்டம்) அவர்கள் ரூ.30,000/ லஞ்சம் கேட்டு பெற்றபோது கைது செய்யப்பட்டார்.

2. 01.07.2026 அன்று திருவள்ளூர் மாவட்டத்தில் அழகுநிலையத்தை எவ்வித இடையூறுமின்றி நடத்த திருமதி.பாக்கியலட்சுமி, காவல் உதவி ஆய்வாளர் மற்றும் திருமதி.அமுல், சிறப்பு காவல் ஆய்வாளர், திருமுல்லைவாயல், ஆகியோர்கள் ரூ.20,000/- லஞ்சம் கேட்டு பெற்றபோது கைது செய்யப்பட்டனர்.

3. 01.07.2026 அன்று சென்னை மாவட்டத்தில் மின் இணைப்பு வழங்க திரு.தியாகராஜன், வணிக ஆய்வாளர், மின்பகிர்மான கழகம், உதவி செயற்பொறியாளர் அலுவலகம், அண்ணாநகர், சென்னை அவர்கள் ரூ.4,000/- லஞ்சம் கேட்டு பெற்றபோது கைது செய்யப்பட்டார்.

4. 01.07.2026 அன்று செங்கல்பட்டு மாவட்டத்தில் பட்டாவில் பெயர் மாற்றம் செய்துதர திரு.புருசோத்தமன், கிராம நிர்வாக அதிகாரி, வாலைபுதூர் கிராமம், வேடந்தாங்கல், மதுராந்தகம் தாலுகா, செங்கல்பட்டு மாவட்டம், அவர்கள் தனக்கு ரூ.5,000/ லஞ்சம் கேட்டு பெற்றபோது கைது செய்யப்பட்டார்.

5. 02.07.2026 அன்று திருச்சி மாவட்டத்தில் சொத்துவரி ரசீதில் பெயர் மாற்றம் செய்துதர திரு.ராமமூர்த்தி, தூய்மை பணியாளர் (பொறுப்பு வருவாய் உதவியாளர்), வார்டு குழு அலுவலகம் -4, பொன்மலை மண்டலம், திருச்சி மாநகராட்சி அவர்கள் தனக்கு ரூ.5,000/- லஞ்சம் கேட்டு பெற்றபோது கைது செய்யப்பட்டார்.

6. 02.07.2026 அன்று தஞ்சாவூர் மாவட்டத்தில் கோவில் திருப்பணிக்கு செலவு செய்ததற்கான தொகையினை விடுவிப்பு செய்ய திருமதி.ஜோதிலட்சுமி, இணை ஆணையாளர், இந்து சமய அறநிலையத்துறை, தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் திருமதி.கிரிஜா, இடைத்தரகர் ஆகியோர்கள் தங்களுக்கு ரூ.1,00,000/- லஞ்சம் கேட்டு பெற்றபோது கைது செய்யப்பட்டனர்.

ஊழல் வழக்கில் 26.06.2026 முதல் 03.07.2026 வரை நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தண்டனைகள்

1. கடந்த 29.06.2026 அன்று திருச்சி ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்புநீதிமன்றம் லஞ்ச (கையூட்டு) வழக்கில் திரு.சுப்பையன், பொது மேலாளர், திருச்சி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் (ஆவின்), திருச்சி மாவட்டம் அவர்களுக்கு 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டணையும், மொத்தம் அபராதம் ரூ.30,000/- விதித்து தீர்ப்பளித்தது.

2. கடந்த 30.06.2026 அன்று ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், சென்னை, வருமானத்திற்கு அதிகமாக சொத்து குவிப்பு வழக்கில் திரு.வி.பிச்சை, அப்போதைய மாநகராட்சி ஆணையருக்கு 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டணை மற்றும் அபராதம் ரூ.5,000/- விதித்து தீர்ப்பளித்தது.

3. கடந்த 30.06.2026 அன்று சேலம் ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்புநீதிமன்றம் லஞ்ச (கையூட்டு) வழக்கில் திரு.ரவீந்திரன், காவல் ஆய்வாளர், மற்றும் திரு.இளங்கோ, தலைமைக் காவலர், கொளத்தூர் காவல் நிலையம், சேலம் மாவட்டம் ஆகியோர்களுக்கு 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டணை மற்றும் அபராதம் ரூ.5,000/- விதித்து தீர்ப்பளித்தது.

4. கடந்த 02.07.2026 அன்று திருவள்ளூர் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம் லஞ்ச (கையூட்டு) வழக்கில் திரு.நாகேஷ்வரராவ், தாசில்தார், வட்டாட்சியர் அலுவலகம், அம்பத்தூர், திருவள்ளூர் மாவட்டம் அவர்களுக்கு 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டணை மற்றும் அபராதம் ரூ.50,000/- விதித்து தீர்ப்பளித்தது.

அரசு அலுவலகங்களில் நடைபெற்ற திடீர் சோதனைகள்

1. கடந்த 29.06.2026 அன்று ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை விழுப்புரம் பிரிவு அலுவலர்கள நில அளவை உதவி இயக்குநர் அலுவலகம் மற்றும் நில அளவை பிரிவு அலுவலகம், விழுப்புரம் மாவட்டத்தில் நடத்தப்பட்ட திடீர் சோதனையில் கணக்கில் காட்டப்படாத ரொக்கம் ரூ.78,000/- கைப்பற்றப்பட்டது.

2. கடந்த 29.06.2026 அன்று ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அரியலூர் பிரிவு அலுவலர்கள் சார் பதிவாளர் அலுவலகம், கீழப்பழுவூர், அரியலூர் மாவட்டத்தில் நடத்தப்பட்ட திடீர் சோதனையில் கணக்கில் காட்டப்படாத ரொக்கம் ரூ.41,000/- கைப்பற்றப்பட்டது.